பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**10 03 2026** **6 45**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** நேபாள நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றுள்ள ராஷ்ட்ரிய சுதந்திரா கட்சித் தலைவர்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

**2.** அனைவருக்கும் கல்வி கிடைக்கக் கூடிய வகையில், தேசிய கல்விக் கொள்கை அமைந்திருப்பதாக மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

**3.** தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் பழைய நில எடுப்பு இடங்களில் குடியிருக்கும் மக்களின் பட்டா கோரிக்கை குறித்து விரைவில் தீர்வு காணப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

**4.** தமிழக கடலோர மாவட்டங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5.** உலகக் கோப்பை தகுதிச் சுற்று மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா - ஸ்காட்லாந்து அணிகளுக்கு இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நேபாள நாடாளுமன்ற தேர்தலில் ராஷ்ட்ரிய சுதந்திரா கட்சி அமோக வெற்றி பெற்றிருப்பதற்கு அக்கட்சியின் தலைவர்கள் திரு. **Rabi Lamichhane,** திரு. **Balendra Shah** ஆகியோருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

அவர்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசிய பிரதமர், நேபாளத்தில் அமையவிருக்கும் புதிய அரசுடன் இணைந்து செயல்பட இந்தியா உறுதிபூண்டிருப்தாக தெரிவித்தார்.

பரஸ்பர முன்னேற்றம், இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கக்கூடிய விஷயங்கள் உள்ளிட்டவற்றில் ஒத்துழைப்பை எதிர்நோக்கி இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

கூட்டு செயல்பாட்டின் மூலம் எதிர்காலத்தில் இந்தியா - நேபாள நாடுகளுக்கு இடையேயான நல்லுறவுகள் புதிய உச்சத்தை எட்டும் என்றும் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அனைவரையும் உள்ளடக்கிய அனைவருக்கும் கல்வி கிடைக்கக் கூடிய வகையில் தேசிய கல்விக் கொள்கை அமைந்திருப்பதாக மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

“அனைவரின் முயற்சியுடன், அனைவருக்குமான வளர்ச்சி” என்ற கருப்பொருளுடன் நடைபெற்ற காணொலிக் கருத்தரங்கில் நிறைவுரையாற்றிய அவர், வரும் நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் கல்வி, வேலைவாய்ப்பு, புதுமைக் கண்டுபிடிப்பு, ஆராய்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

இந்தக் கருத்தரங்கில் பல்வேறு துறைகளையும் சேர்ந்த நிபுணர்கள் பங்கேற்று தங்களின் கருத்துகளை தெரிவித்ததற்கு தமது நன்றியை தெரிவித்துக்கொள்வதாகவம் அவர் குறிப்பிட்டார்.

பட்ஜெட் அறிவிப்புகளை நடைமுறைப்படுத்துவதில் நிபுணர்களின் ஆலோசனைகள் முக்கிய பங்கு வகிக்கும் என்றும் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

<<<<>>>>

மருந்துகள், சுகாதாரம் மற்றும் மருத்துவ தொழில்நுட்பத் துறைகளில் புதிய வாய்ப்புகளை உருவாக்க இந்தியாவின் தடையற்ற

வர்த்தக ஒப்பந்தங்கள் வழிவகுக்கும் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று பட்ஜெட்டுக்கு பிந்தைய காணொலிக் கருத்தரங்கில் உரையாற்றிய அவர், உலக அளவில் இந்தியாவின் வர்த்தக நிலைப்பாட்டை வலுப்படுத்துவதற்கு மருத்துவத் துறை முக்கியப் பங்கு வகிக்கும் என்று கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு கடந்த மூன்றரை ஆண்டுகளில் 9 தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சுகாதாரத் துறையை மேலும் வலுப்படுத்துவதற்கு ஏதுவாக ஏற்றுமதியில் அதிக கவனம செலுத்த வேண்டியது அவசியம் என்று திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் துறைமுகம், ஒரே கப்பலில் இருந்து 147 பிரமாண்ட காற்றாலை இறகுகளை இறக்கி சாதனை படைத்துள்ளது.

சீனாவில் இருந்து வந்த இந்த இறகுகள் வெற்றிகரமாக இறக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Lakshmanan - 47 Sec)**

<<<<>>>>

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் பழைய நில எடுப்பு இடங்களில் குடியிருக்கும் மக்களின் பட்டா கோரிக்கை குறித்து விரைவில் தீர்வு காணப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

வீட்டு வசதி வாரியத்தின் சில இடங்களில் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது தெரியாமல் பொதுமக்கள் பலர் மனைகளை வாங்கி குடியிருந்து வருவதாகவும், அவர்களின் கோரிக்கைகளை தீர்ப்பது குறித்து புதிய திட்டம் தொடங்கப்பட்டதாகவும் வீட்டு வசதி வாரிய செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அதன்படி இருநபர் குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு தனது விசாரணை அறிக்கையை விரைவில் அரசுக்கு அளிக்க உள்ளது.

அதனடிப்படையில் அரசின் ஒப்புதல் பெற்று நில உரிமையாளர்களுக்கு விரைவில் பட்டா கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

கோடை காலத்தில் அதிகரிக்கும் கடுமையான வெப்பம் காரணமாக பறவைகள் பாதிக்கப்படுவதை தடுக்க, சேலத்தில்

வீடுகளில் சிறிய தண்ணீர் தொட்டிகளை வைத்து பறவைகளுக்கு தன்னார்வலர்கள் உதவி வருகிறார்கள்.

இதன் மூலம் நீர்ச்சத்து குறைபாட்டால் பறவைகள் பாதிப்பை தடுக்க முடியும் என்று அவர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

(Voice Byte - Vijayakumar - 58 Sec)

<<<<>>>>

தமிழக கடலோர மாவட்டங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென் தமிழகத்தில் இருந்து கடலோர கர்நாடகம் வரை வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதன் காரணமாக கடலோர மாவட்டங்களின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

தென் மாவட்டங்களில் நாளை லேசான மழை பெய்யும் என்றும், வரும் வெள்ளிக்கிழமை கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

ஈரான் மற்றும் யுக்ரைனுக்கு எதிரான தாக்குதல் குறித்து ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின், அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்-ஐ தொலைபேசியில் தொடர்புகொண்டு ஆலோசனை மேற்கொண்டார்.

-------------

பாகிஸ்தான் ராணுவ தளபதிகள், உள்நாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல், அந்தப் பிராந்தியத்தல் பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருவதாக ஆஃப்கனிஸ்தான் வெளியுறவு அமைச்சர் திரு. **Amir Khan Muttaqi** குற்றம் சாட்டியுள்ளார்.

-------------

தோஹாவில் சிக்கித் தவித்த சுமார் ஆயித்துக்கும் மேற்பட்ட இந்தியர்கள், கடந்த 3 நாட்களில் விமானங்கள் மூலம் தாயகம் அனுப்பி வைக்கப்பட்டதாக கத்தாரில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

-------------

மேற்குவங்கத்தில் சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் தலைமைத் தேர்தல்

ஆணையர் திரு. ஞானேஷ் குமார் தலைமையிலான குழுவினர் நேற்று ஆலோசனை நடத்தினர்.

-------------

நாடு முழுவதும் 46 நகரங்களில் உள்ள 62 உணவகங்களில் வருமான வரித்துறையினர் நடத்திய சோதனையின்போது 408 கோடி ரூபாய் மதிப்பிலான விற்பனை மறைக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டு விசாரணை நடைபெறுகிறது.

-------------

பாதுகாப்பான முறையில் பட்டாசு தயாரிப்பது குறித்து ஆந்திர மாநில ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் குழு, சிவகாசியில் உள்ள பட்டாசு ஆலைகளில் நேற்று ஆய்வு மேற்கொண்டனர்.

-------------

சட்டப்பேரவைத் தேர்தலின்போது கண்காணிப்பு பணியில் ஈடுபடும் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் கூட்டம் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் நடைபெற்றது.

-------------

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ராஜகோபாலசுவாமி கோயிலின் பங்குனி திருவிழாவின் ஒரு பகுதியாக புன்னைமர வாகனத்தில் கண்ணன் திருக்கோலத்தில் சுவாமி வீதி விலா விமரிசையாக நடைபெற்றது.

-------------

மத்திய அரசின் நலத்திட்டங்களை விளக்கும் வகையிலான ஒருங்கிணைந்த சேவை முகாம், திருப்பூரில் இரண்டாவது நாளாக இன்றும் நடைபெற உள்ளது.

-------------

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி ASMITA திட்டத்தின்கீழ் மகளிருக்கான தடகளப் போட்டிகள் செங்கல்பட்டு மாவட்டம் மேடவாக்கத்தில் நடைபெற்றது.

-------------

காஞ்சிபுரம் அருகே தனியார் கல்லூரியில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

-------------

-------------

*<u>விளையாட்டுச் செய்தி</u>*

**உலகக் கோப்பை தகுதிச் சுற்று மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா - ஸ்காட்லாந்து அணிகளுக்கு இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.**

**ஹைதராபாதில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் இரு அணிகளும் தலா 2 கோல் அடித்தன.**

**<<<<The End>>>>**